# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## புலத்சிங்கள ஜனசக்தி மகா சங்கம் (கூட்டிணைத்தல்)

**புலத்சிங்கள ஜனசக்தி மகா சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விதுர விக்கிரமநாயக்க அவர்களால் 2012, மாச்சு மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.*

*(2012, பெப்புருவரி மாதம் 27 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது*

---

**[ 156 ஆம் சட்டமூலம் ]**

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 006627 - 350 (2012/03)

## புலத்சிங்கள ஜனசக்தி மகா சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

**முன்னுரை.**

“புலத்சிங்கள ஜனசக்தி மகா சங்கம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் குறிக் கோள்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக களுத்துறை மாவட்டத்தில் புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் ; அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும் ; அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**சுருக்கப்பெயர்.**

**1.** இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, புலத்சிங்கள ஜனசக்தி மகா சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**புலத்சிங்கள ஜனசக்தி மகா சங்கத்தைக் கூட்டிணைத்தல்.**

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் “சங்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) புலத்சிங்கள ஜனசக்தி மகா சங்கத்தின் தற்போதைய உறுப்பினர் களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “புலத்சிங்கள ஜனசக்தி மகா சங்கம்” எனும் பெயரின்கீழும், மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டு

2-PL 006574 -50 (2012/02)

மென்பதோடு, அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) களுத்துறை மாவட்டத்தில் புலத்சிங்கள பிரதேச செயலளர் பிரிவில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக ஊக்குவிப்பு வழங்குதல் ;

(ஆ) சுய சக்தியையும் பங்குபற்றுதலையும் அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திச் செயற்பாட்டையும் கட்டியெழுப்பி குடும்ப அபிவிருத்திக்காக அதனைப் பயன்படுத்திக்கொள்ளுதல் ;

(இ) விவசாயம், கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சித் துறையில் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து கருத்திட்டங்களை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கொண்டுநடாத்துதல் அத்துடன் மேம்பாடு கருதி மக்களை ஈடுபடுத்தல் ;

(ஈ) கிராமிய மக்களை சேமித்தலுக்காகவும், சிக்கனத்துக்காகவும் தூண்டுதல் ;

(உ) இளைஞர் யுவதிகளை வருமானம் உழைக்கும் கருத்திட்டங்களுக்காகத் தூண்டுதல், தொழில் திறமைகள் மற்றும் ஆற்றல்களையும் வளர்ப்பதற்காக உந்து சக்தியாக உதவுதல், கடன் திட்டங்கள் மற்றும் பயிற்சித் திட்டங்களை நிறைவேற்றுதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஈடுபட்டுள்ளவர்களின் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வி விடயங்களுக்காகப் புலமைப் பரிசில்கள், நிதியுதவிகள் மற்றும் பரிசுகளை வழங்குதல் ;

(எ) அதிகார எல்லைப் பிரதேசத்திற்குள் பொதுமக்களின் சுகாதாரம், சுத்தம் பேணல் மற்றும் போசாக்கு விருத்திக்காக ஒத்தாசை புரிதல், விளையாட்டுத் திறன்களை வளர்ப்பதற்காக ஆர்வமூட்டல் ;

(ஏ) பொதுமக்களது சமய, கலாசார மற்றும் கல்விசார் அபிவிருத்திக்காக வாய்ப்பளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தலும் அமுல்படுத்தலும் ;

(ஐ) அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் மக்களுக்காக நலன்புரி வசதிகளை வழங்குதல் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை விருத்திசெய்து கொள்வதற்காகவும் நிறைவேற்றிக்கொள்வதற்காகவும் பொருத்தமானவை எனக் கருதப்படும் நூல்கள், பருவ ஏடுகள், பிரசுரங்கள், புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றை அச்சிடுதல், வெளியிடுதல் அத்துடன் விநியோகித்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் கருமங்களுக்காகப் பிணையுடன் அல்லது பிணையின்றி கடன்களைப் பெற்றுக்கொள்ளலும் சேகரித்தலும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஈடுபட்டவர்களின் சேமிப்புகள், நன்கொடைகள் என்பவற்றை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது சேகரித்தல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதையும் நிறைவேற்றிக்கொள்வதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ வாய்ப்பளிக்கும் சட்டபூர்வமான ஏற்றுக்கொள்ளல்கள், அங்கீகரித்தல், நடைமுறைப்படுத்தல், நிறைவேற்றுதல் மற்றும் நிர்வகித்தல் ;

(ஈ) பற்றுச்சீட்டுகள், காசோலைகள், உறுதிப்பத்திரங்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய வேறு சாதனங்களை எழுதுதல், ஏற்றுக்கொள்ளல், கழிவு வழங்கல், புறக்குறிப்பிடல், கொடுக்கல் வாங்கல் செய்தல், கொள்ளல், விற்றல் மற்றும் விநியோகித்தல் அத்துடன் வங்கிக்கணக்குகளைத் திறத்தல், செயற் படுத்தல், பேணிவருதல், மூடுதல் ;

(உ) எவரேனும் ஆட்கள், தனியார், சபைகள் அல்லது நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளில் அல்லது ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படும் வகையில் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர் களை நியமித்தல், சேவையில் ஈடுபடுத்தல், சேவை யிலிருந்து நீக்குதல் அல்லது அவர்களது சேவையை முடிவுறுத்தல் அத்துடன் அவர்களின் சம்பளம், படி மற்றும் பணிக்கொடைகளை வழங்குதல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உடனடியாகத் தேவைப்படாத பணங் களை இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு முறிகளில் அல்லது வேறு முதலீடுகளில் முதலீடுசெய்தல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் எல்லாக் குறிக்கோள்களையும் அல்லது அவற்றில் ஏதேனுமொன்றை எய்துவதற்கு, அவசியமான அல்லது உகந்ததெனக் கருதும் எல்லா கருமங்களையும் காரியங்களையும் இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செய்தலும் நடைமுறைப் படுத்தலும்.

கூட்டுத்தாப னத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய வலய மட்டத்தில் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் தேர்ந்து நியமிக்கப்படும் ஒன்பது (09) உறுப்பினர்கள் மற்றும் தலைவர் பெயர்குறித்துரைக்கும் ஐந்து (05) உறுப்பினர்களையும் கொண்ட “நிர்வாக சபை” ஒன்றினால் இச்சட்டத்தினதும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் அமைய நிருவகிக்கப் படுதல் வேண்டும்.

(2) புலத்சிங்கள பிரதேச செயலாளர் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருத்தல் வேண்டும்.

(3) நிர்வாக சபையினால் பெயர்குறிப்பிடப்படும் பொருத்தமான ஆறு (06) பேருடன் மற்றும் தலைவர் உட்பட ஏழு (07) பேரைக் கொண்ட மதியுரைஞர் சபையொன்று கூட்டுத்தாபனத்தின் வழிகாட்டலுக்காக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த நிர்வாக சபை உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிர்வாக சபை உறுப்பினர்களாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்திற்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்திற்கு உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளல், அவர்கள் விலகுதல், அவர்களை விலக்குதல், அவர்களால் செலுத்தப்படவேண்டிய உறுப்பாண்மைக் கட்டணங்கள் மற்றும் சந்தாப்பணங்களைத் தீர்மானித்தல் ;

(ஆ) நிருவாக சபையின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்து கொள்ளல், பதவிதாங்குநர்கள் பதவிநீங்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் சபையின் கருமங்களையும் தத்துவங்களையும் மேற்கொள்ளல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபையின் மற்றும் ஏனைய அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களை நியமித்தல், அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் நடத்தை ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நிருவாக சபையின் அல்லது ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறைகள், அக்கூட்டங்களை கூட்டுதலும், நடாத்துலும், அக் கூட்டங்களில் வெற்றிடங்களை நிரப்புதல் பற்றி அறிவித்தல் மற்றும் நிகழ்ச்சிநிரல், அதற்கான கூட்ட நடப்பெண்ணும், அதன் அலுவல்களை நடாத்துதலும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு நேர்முந்திய நாளன்று அமுலில் இருந்த சங்கத்தின் விதிகள், இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத வரை இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அவ்விதிகள் இப்பிரிவின் (1) ஆவது உபபிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு விதியாக அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் திருத்தியமைக்கலாம், மாற்றலாம், அதனோடு எதனையும் சேர்க்கலாம் அல்லது அதனை நீக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்திற்காக பெறப்படுகின்ற கொடை, அன்பளிப்பு, ஒப்பப்பணம், உதவு தொகை, உறுப்பாண்மைக் கட்டணங்கள் பங்குகள் மற்றும் கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபை அங்கீகரிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் புனரமைத்தல், மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான ஏதேனுமொரு பெறுமானத் தேய்வு நிதியமொன்றினை கடனாழ் நிதியமொன்றினை கூட்டுத்தாபனம் உருவாக்க வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**8**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகிய வற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்களை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பு வரையறை.*

**9**. கூட்டுத்தாபனத்தின் எந்த உறுப்பினரும், கூட்டுத்தாபனத் திற்குச் செலுத்தப்பட வேண்டிய அத்தகைய அங்கத்துவக் கட்டணத்திற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் கடன்கள் மற்றும் பொறுப்புக்களைத் தீர்த்துக்கட்டும் நோக்கத்திற்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக வேறு ஏதாவது உதவு தொகை செலுத்தப் பொறுப்பாதல் ஆகாது.

*சங்கத்தினால் செலுத்தப்படற்பாலனவும் அதற்குச் செலுத்தப்பட வேண்டியனவுமான கடன்கள்.*

**10**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்துக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கலைப்பின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**11**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அதன் கடன்கள், பொறுப்புக்கள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதாவது சொத்து எஞ்சியிருப்பின் அத்தகைய சொத்து கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. எனினும் அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கும் பிற நிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றுக்கு, அந்நிறுவனத்தின் அல்லது அந் நிறுவனங்களின் உறுப்பினர்களிடையே ஏதாவது வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப்பட்டிருப்பின், கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படல் வேண்டும். கூட்டுத்தாபனம் கலைக் கப்படுகின்ற வேளையிலோ அதற்கு முன்னராகவோ கூட்டுத்தாப னத்தின் அங்கத்தவர்களால் அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் பற்றித் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

கணக்காய்வும் கணக்குகளும்.

**12.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், செலவினங்களும் சொத்துக்களும் அத்துடன் கூட்டுத் தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ளவரும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட தொழில் புரிவதற்கான தகைமைச் சான்றிதழை வைத்திருப்பவருமாகிய ஆளொருவர் ; அல்லது

(ii) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட தொழில் புரிவதற்கான தகைமைச் சான்றிதழைக் கொண்டிருக்கின்றவர்களு மான பங்காளர்களைக் கொண்ட கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**13.** கூட்டுத்தாபனத்தின் தலைவர் அல்லது முகாமைத்துவப் பணிப்பாளர் அல்லது சபையினால் முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட ஆட்களின் முன்னிலையிலன்றி கூட்டுத்தாபனத் தின் இலச்சினை எவ்விதமான சாசனத்திலும் பொறிக்கப்பட லாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்